விலை: சதம் 75 ★ ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஐப்பசி 12 ஜுல்ஹஜ் 29 இதழ் 255
யாழ்ப்பாணம் புதன்கிழமை 28 10-1981

இலங்கை நிலைமை பற்றி இந்திய அரசு அக்கறை

லோகசபையில் நரசிம்மராவ் தகவல்

புதுடில்லி, அக். 27

இலங்கையில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் அந்நாட்டின் உள்விவகாரமாக இருந்தபோதிலும் இதுகுறித்து இந்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு அங்குள்ள நிலைமைகளை உடனுக்குடன் அறிந்து கொண்டிருக்கிறது. இலங்கை அரசும் எமக்கு உரிய தகவல்களை அவ்வப்போது தந்துகொண்டிருக்கிறது.

இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இந்திய லோக சபையில் தெரிவித்தார். தமிழக எம். பி. ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழகக்கடற்கரையில் அண்மையில் கரைஒதுங்கிய சடலங்கள், இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களில் கொல்லப்பட்டு சடலங்கள் (6-ம் பக்கம் பார்க்க)

வழமையான நிலைக்கு யாழ்.நகர் திரும்புகிறது

பொலிஸ் ரோந்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரில் கடந்த இரண்டு வாரங்களாக நீடித்த பதட்ட நிலை ஓரளவு தணிந்து, வழமையான நிலைக்கு நகர் திரும்பிக்கொண்டிருக்கிறது.

இம்மாதம் 15-ம் திகதி யாழ். நகரில் கே. கே. எஸ் வீதியில் இராணுவவீரர்கள் இருவரும் ஒரு மெக்கானிக்கும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதைத் தொடர்ந்து யாழ் நகரில் பதட்டநிலை காணப்பட்டது.

இதன் எதிரொலியாக பஸ் சேவை நடைபெறவில்லை. தியேட்டர்களில படக்காட்சிகள் ரத்துச் செய்யப்பட்டன. பாடசாலைகள் அரைநேரத்துடன் மூடப்பட்டன. வியாபாரநிலையங்கள் இழுத்துப் பூட்டப்பட்டன.

மக்கள் நடமாட்டமும் குறைந்திருந்தது. 'பதட்டம் இப்பொழுது தணிந்துள்ளதைத் தொடர்ந்து பகலவேளைகளில மட்டும் நடைபெற்றுக் கொண்டிருந்த பஸ்சேவை, மீண்டும் வழமைபோல நடைபெறுகின்றன.

தியேட்டர்களில தொடர்ந்து பகல காட்சிகள் மட்டுமே நடைபெறுகின்றன.

யாழ் நகரில வர்த்த- வியாபார நிலையங்கள் திறந்திருந்தன வங்கிகளும் முழுநேரமும் திறந்திருந்தன.

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ் செயலக மகாநாட்டில் பொலிசாரின் ரோந்து அதிகரிப்பது என்ற முடிவின்படி பொலிசசார் அடிக்கடி யாழ் நகரின்முக்கிய இடங்களில ரோந்து காவல புரிந்து வருகின்றனர்.

ரோந்து சுற்றிவரும் பொலிசார், சந்தேகத்துக்கிடமான முறையில நடமாடுவர்களை கைதுசெய்து வருகின்றனர். (மா)

சந்தேகத்துக்கு இடமானோர் யாழ்நகரில் கைது!

15 இளைஞர்களுக்கு இரண்டு வாரம் றிமாண்ட்

(சுண்டிக்குளி)

யாழ் நகரில நிகழ்ந்த இராணுவ துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நகரின் பலபகுதிகளிலும் இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களும் களவுகளும். இனம்தெரியாதவர்களின் தாக்குதல சம்பவங்களும் யாழ் பொலிசாருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக நேற்று முன்தினம் யாழ் செயலக மண்டபத்தில யாழ் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா தலைமையிலஉயர் அதிகாரிகளும் பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளும் கூடி ஆராய்ந்தனர் நகரில சந்தேகத்துக்கு இடமானவர்களைப் பொலிசார் கைது செய்யவேண்டுமென்று இக் கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

இம்முடிவைத் தொடர்ந்து யாழ் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு அதிகாரி திரு எஸ் ஸ்ரீதரன் தலைமையில திரு குலசிங்கம், திரு இலங்கஸ்ரீ ஆகியோரைக் கொண்ட பொலிஸ்கோஷ்டியினர் கடந்த இரு தினங்களாக சுமார் 15 இளைஞர்களையும், 3 இளம் பெண்களையும் கைதுசெய்து யாழ் மாஜிஸ்திரேட் திரு ரி ஜோகநாதன் முன்னிலையில ஆஜர்செய்தனர்.

யாழ். மாஜிஸ்ரேட் அனைவரையும் 14 நாள் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

யாழ் பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை நேற்றுமுதல் வழமையானது.

இம்மாதம் பதினாறாம் திகதி யாழ். நகரில் இராணுவ வீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்த சம்பவத்தைத் தொடர்ந்து பஸ் சேவை சீர்குலைந்தது. சில நாட்களில் சில மணி நேரமும் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திலும் பஸ் சேவை நடைபெற்றது.

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து மீண்டும் வழமையான பஸ் சேவையை நடத்துவதென்று வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. எஸ் கனகரத்தினம் முடிவுசெய்துள்ளதாக வ. பி. போ. சபையின் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு கே. தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

பஸ் சேவையை வழமைபோல நடத்துவது பற்றி திரு கனகரத்தினம் நேற்றுக்காலை ஊழியர் பிரதிநிதிகளுடன் மகாநாடு ஒன்றை நடத்திய பின்னரே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் திரு தனபாலசிங்கம் தெரிவித்தார்.

பஸ்சேவை வழக்கம்போல அதிகாலை நான்கு மணி முதல் இரவு ஒன்பது முப்பது மணி வரை நடைபெறும்.

ரூ. 11 ஆயிரம் கொள்ளை!

(சுண்டிக்குளி)

வீட்டில் நித்திரையில் இருந்தவர்களை துப்பாக்கி முனையில் மிரட்டி வாய்க்குள் துணியைத் திணித்து ஒரு தனி அறைக்குள் அவர்களை பூட்டிவைத்து 11,625 ரூபா பெறுமதியான நகைகளை ஐவர் கொண்ட கோஷ்டி கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் ஆனைக்கோட்டை நவாலி வீதியைச் சேர்ந்த நில அளவையாளர் திரு. ரெறபிட் தேவராசா மிடன் எனபவரது வீட்டில நிகழ்ந்துள்ளது.

திரு. ரெறபிட் தேவராசா மிடன் பொலிசாருக்கு அளித்த முறைப்பாட்டிலதெரிவித்திருப்பது 'இது சம்பவம் நடைபெற்ற தினம் இரவு 10 மணியளவில மனைவி பிள்ளைகள் எல்லோரும் நித்திரையில ஆழ்ந்து இருந்தோம். சத்தம் கேட்டு நன்கதவைத் திறந்த போது சுமார் 5 பேர் துப்பாக்கி, கத்தி பொலுகள் சகிதம் என்னை மடக்கி வாய்க்குள் துணியைத் திணித்து கட்டிப் போட்டனர். பின்னர் எம் பிள்ளைகளையும் கொன்று விடுவதாக மிரட்டி வீட்டுக் குசினியில பூட்டிவைத்தனர் பின்னர் என்னைப் பயமுறுத்தி திறப்பை வாங்கி பாதுகாப்பாக பூட்டிவைக்கப்பட்டிருந்த சங்கிலி, காப்பு, விரலுயர்ந்த கைக்கடிகாரங்கள் 500 ரூபா ரொக்கம் போன்றவற்றைக் கொள்ளையடித்தனர். இதனுடன் எனது மனைவி, பிள்ளைகளிடம் சென்று அவர்கள் அணிந்திருந்த தோடுகள், ஜிப்சிகள் போன்ற நகைகளையும் துப்பாக்கி முனையில மிரட்டி பெற்றுக்கொண்டு தலைமறைவாகி விட்டனர். வாகனம் ஒன்றும் இலலாமலே அவர்கள் சென்று மறைந்துவிட்டனர்''.

யாழ். குற்றத்தடுப்பு அதிகாரி திரு. எஸ். ஸ்ரீதரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (மா)

பேரக்குவரத்து வசதிக்கு கடற்றொழில் அமைச்சு உதவி

(சுண்டிக்குளி)

மீன்பிடியாளர்களின் இரவு நேரக் கடற்போக்குவரத்து வசதிக்கு உதவும் முகமாக பல வெளிச்சக்கம்பங்களை கடற்றொழில் அமைச்சு யாழ் மாவட்ட மீனவர்களுக்கு வழங்கியுள்ளது.

மீன்பிடி அபிவிருத்தித்திட்டத்தின கீழ் வேலணைத்துறை, நண்டைதீவு, மாதகல், தொண்டமனாறு, பருத்தித்துறை இன்பருட்டி ஆகிய இடங்களில் முக்கிய கடற்போக்குவரத்துப் பாதைகளில் மின்சாரவெளிச்சக்கம்பங்களும் எழுவைதீவு, புளியந்துறை மணல்காடு, நாகர்கோவில், ஆனையவளை, நாச்சுக்குடா, பூநகரி விநாயகபாடு ஆகிய இடங்களில் மீன்பிடி வள்ளங்களின் முக்கிய போக்குவரத்துப் பாதைகளில் மண்ணெண்ணெயில்இயங்கும் வெளிச்சக்கம்பங்களும் நிறுவப்பட்டுள்ளன.

தவறான தகவல்

இம்மாதம் 25ம்திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் பக்கத்தில வெளியான "நான் தான் உமாமகேஸ்வரன். பொலிசார் பிடித்துப் பார்க்கட்டும்" என்ற தலைப்பில வெளியான செய்தி தவறானது என்று அறிகின்றோம். இத்தவறுக்காக எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (ஆ-ர்)

பின்லாந்து ஜனாதிபதி ராஜினாமா

லண்டன் அக் 27

பின்லாந்து ஜனாதிபதி ராஜினாமாச் செய்துள்ளார் என அறிவிக்கப்பட்டது. சுகவீனம் காரணமாக இவர் ராஜினாமாச் செய்துள்ளார்.

யாழ் மாநகரசபை இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மாதாந்தம் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல நடைபெறவிருக்கிறது.

யாழ். மாநகர முதலவர் திரு இராஜா விசுவநாதன் தலைமையில நடைபெறும் இக் கூட்டத்தில யாழ் மாநகர நிலைமைகள் குறித்து ஆராயப்படவிருக்கிறது. (மா)

யாழ். மாநகரசபை உறுப்பினர் ஆறுமுகம் காலமானார்

(அரியாலை)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் கூட்டணி உறுப்பினரான திரு. சு ஆறுமுகம் நேற்றுமுன்தினம்காலமானார். இவர் நீண்ட நாட்களாகச் சுகவீனமுற்றிருந்தார்.

நீண்டகாலம் அரியாலை மேற்கு காந்தி நிலையத்தின் தலைவராகப் பணியாற்றியதுடன், யாழ். மாவட்ட சன சமூக நிலைய சமாசத்திலும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த இவர் சிறந்த சமூகத் தொண்டரும்மாவார்.

சிறந்த மேடைப் பேச்சாளராகவும் விளங்கியதுடன் இவர் தமிழரசுக்கட்சி நடாத்திய பலபோராட்டங்களில் தொண்டனாகக் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அ

இன்று திறப்புவிழா

அம்பாள் மரஞ்சீவும் யந்திரத்தொழிற்சாலை

இன்று 28-10-81 புதன்கிழமை காலை 10-15 மணிக்கு எமது தொழிற்சாலையை யாழ் மாவட்டசபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைப்பார்.

செ. கோபாலகிருஷ்ணன்

பிரதான வீதி,
சங்கானை.

1315

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 12-ம் திகதி
புதன்கிழமை
(28 - 10 - 81)

மேடம்: குடும்பம் இன்று கலகலப்பாக காணப்படும். இளைஞர்களுக்கு வருமானம் ஏற்படும் பிள்ளைகளினால் பெருமைக்கும் இடமுண்டு.

இடபம்: வாய்வுக்கோளாறினால் வேதனைப்படுவீர்கள். உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். எதிரிகளின் சோழித்தனமான நடவடிக்கைகள் உங்கள் மனதை வாடச் செய்யும்.

மிதுனம்: தந்தைவழி ஆதரவு தவறாமல் கிடைக்கும். தடைகள் எல்லாம் தகர்ந்து பொடி பொடி தனிக்கொடி பறக்கும் புதுமையான எண்ணங்கள் தலை தூக்கும்.

கடகம்: உற்சாகமானதினம். உறவினர்கள் பக்கத்துக்கொடி வாட்டுவார்கள். புதிய தொழில்களில் மனதைச் செலுத்துவீர்கள். இடமாற்றமொன்றுக்கு முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

சிங்கம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு. எதிர்த்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள். பணவரவாலதிக நன்மை திருப்பம் ஏற்படும்.

கன்னி: எதிலும் தடுமாற்றம் ஏற்படும் குழப்பம் மேலோங்கி மூலம் அனாதரவு வரப்படலாம். வியாபாரத்தொழிலில் மந்தநிலை காணப்படுகிறது.

துலாம்: இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிவலி குறுறும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ள நேரிடலாம்.

விருச்சிகம்: அறிவாற்றல் வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பீர்கள் புலவர்கள் போற்றப்படுவார்கள் வாகனம் கொள்வனவு செய்வதில் சிலர் ஈடுபடலாம்.

தனு: முக்கியமான விடயங்களை இன்று பிரயோகிப்பது விரும்பத்தக்கது. உள்வீட்டிலேயே உணவு நடைபெறலாம் நடவடிக்கை இறுதிவரை பயமாகவே இருக்கும்.

மகரம்: யோசனைகள் மனமுதிர்ச்சியிலும் மேலிடும் பொருள்வரவும் நற்செய்தி கிடைக்கும் நற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கும்பம்: ஒளிமயமான எதிர்காலத்துக்கு இன்று அத்திவாரம் படலாம் சிலர் வாழ்க்கையில் திருமணப்பேச்சுக்கு இடம் பெறும் தங்கையின் முன்னேற்றம் எச்சரிக்கப்படும்.

மீனம்: யோருமையில் நிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்.

சோதிட வாரிதி
திருமலை ஸ. வேலுப்பிள்ளை

கடற்றொழிலாளர் சங்க சமாஜத் தலைவர்

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைவராக, முன்னாள் உபதபாலதிபர் திரு. கொ. அ. சுரதிலகவிபோட்டியின்றி தெரிவானார்.

இவர் தொடர்ந்து ஐந்து வருடங்கள் தலைவராகப் பணிபுரிந்துவருகிறார். [இ]

சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

கடுவேட கிராம அபிவிருத்திச் சங்கம் உலக உணவு தினத்தை முன்னிட்டு கட்டைகிராமக்குளத்தை. கிராம தானம் மூலம் ஆழமாக்கியுள்ளது. கலிதெல்லேற்கு கிராம அபிவிருத்தி நிலாரி திருமதி பொன்மணி சிவானந்தன், மாணிப்பாய்பயிர்ச்செய்கைஉதிதியோகத்தர் திரு. எஸ். சிவகுமாரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கிராம தானப் பணியில் சங்க உறுப்பினர்களும் பொதுமக்களும் பங்குபற்றினார்கள்.

அருள் புரியும் அரியாலைப் புனிதர்

அரியாலை புனித. யூதாததேயு ஆலய ஐப்பசித் திருநாள் நேற்றும் இன்றும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இப்புனிதரின் திருத்தலம் இலங்கையில் முதலில் மட்டு நகரில் உள்ள நேற்ற தினம் ஆரம்பிக்கப்பட்டது. பிரபுயரம். மகுதி மக்களால் ஆரம்பிக்கப்பட்டு உலக பாகங்களில் இருந்து வரும் பக்தர்களின் முயற்சியால் முன்னேறிவரும் இத்திருத்தலம் இவ்வருடம் 10 வது ஆண்டு நிறைவையும் கொண்டாடிற்று. இவ்வாலயத்தில் மாதாந்தம் முதல் வெள்ளிக்கிழமைகளிலும் சித்திரை மாதக் கடைசி ஞாயிறு புனிதரின் தினங்களாக அனுசரித்துவருவது குறிப்பிடத்தக்கது. இவரின் இத்தனையையும் பெருமைகளையும் கூறுவதானால் திருச்சபையினால் இப்புனிதரை "கைவிடப்பட்டவர்களின் காவலர்" எனவும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகவும் கிறிஸ்து யேசுவின் உறவினராகவும் உள்ளார். புனித. யூதாததேயு என்னும் பெயருக்கு சிரிய பாஷையில் "பயபக்தியுள்ளவர், சாந்தமும் அன்பும் நிறைந்தவர், தாழ்மையில் உயர்ந்தவர்" என்பது பொருளாகும். இப்புனிதரின் திருத்தொண்டு யூதேயா, சமேரியா, இறுமியா, சீரியா, மெசப்பத்தேமியா போன்ற தேசங்களில் வட்டு மிரண்டியனாகச் சீவித்த அத்தேச மக்களைச் சீர்திருத்த முயன்ற மக்களாக சமய பக்தியிலும் சீவித்த கறிபித்தார் என அவரது சீவிய சரித்திரத்தில் கூறப்படுகிறது. இப்புனிதரின் பெயரால் இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற பல தேசங்களிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

செ. சேவியர்

முதலிடம்

(மன்னார்)

மன்னார் மாவட்டபாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் விடத்தல் தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை தேசிய மாகாணப் பாடங்களில் மேற்பிரிவு, கத்திய பிரிவுகளில் முறையே முதல் இடங்களைப் பெற்றுள்ளன. மன்னார் மாவட்டத்தில் தெரிவு பெற்ற இவ்விரு முதலிட நிகழ்ச்சிகளும், மடிக்களப்பு பிரதேசங்களை விவித்திணைக்களத்தினால் நடத்தப்படவிருக்கும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான சமிதி, நடன, நாடகப் போட்டிகளில் பங்குபெறவுள்ளன.

குழந்தை கருகி மரணம்

(வாழ்ப்பாணம்)

தனது குழந்தையை நித்திரையாக்கிவிட்டு பக்கத்து வீட்டுக்குச் சென்ற தாய், திரும்பிவந்தபோது வீடு தீப்பற்றி எரிந்து வீட்டினுள் குழந்தை கருகிய நிலையில் இறந்து கிடந்தது.

கனகரம்பிளைக்குளம் என்ற இடத்திலேயே இச்சம்பவம் நடந்துள்ளது. எஸ். வாசுகி என்னும் ஒன்றரை வயதுக் குழந்தையே தீக்கிரையானது.

விளிநொச்சி மரண விசாரணை அதிகாரி திரு. எம். கோகுலராஜா மரண விசாரணையில் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

புங்கங்குளம் வீதி கொழும்புத்துறையில் [illegible] விடு [illegible] நிலம் 4 பரப்பு விற்பனைக்கு உண்டு. விபரத்திற்கு S. சிவராசா, இந்திரகலா ஸ்ருடியோ, நம். 70, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [1500]

1000 முதல் பனைகளுக்கு அதிகமாவுள்ள 20 ஏக்கர் காணி மூகமாலையிலும் 3½ ஏக்கர் காணி புளியங்கூடலிலும் M. P. C. S., A.P.C.S. கட்டிடங்களுக்கு இடையில் வீதி கருகாமையிலுள்ள விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 12, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 1308

காரைநகர்
ம. நோ. கூ சங்கம்
வெற்றுச்சாக்கு
கேள்விப்பத்திரம் அறிவித்தல்

1734 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. 14-11-81 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மீளப்பெறும் வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்தவேண்டும். நிபந்தனைகளையும், விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் தலைவர், ம. நோ. கூ. சங்கம் காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படக்வேண்டும். இக்கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு.

குறிப்பு: காரியாலயத்தில் ரூபா 2/- செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
ம. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.

1981-10-23. 1309

மகாராணியின் விருது பெற்ற தமிழர்

(கொழும்பு)

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதராலயமான "வெஸ்மினிஸ்டர்" [illegible] திரு. ராமு சிவலிங்கராஜாவுக்கு மகாராணியார் "ரோயல் விக்ரர்" பதக்கம் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

இக்கௌரவத்தைப் பெற்ற திரு. ராமு. சிவலிங்கராஜா பல வருட காலமாக இத்தூதரால பணியில் கடமையாற்றிவருகிறார்என்பது குறிப்பிடத்தக்கது. 69 வயதான திரு. சிவலிங்கராஜாவை 'நீர் ஒரு நல்ல மனிதர்" என மகாராணியார் பாராட்டியுள்ளார். எடின்பரோ கோமகன், இராஜ பூர்வீகம் பற்றி விசாரித்தபோது இந்தியப் பெற்றோருக்கு இலங்கையில் பிறந்தவரென தெரிவித்தார்.

1962ம் ஆண்டிலிருந்து வெஸ்ட்மினிஸ்டர் இல்லத்தில் திரு. சிவலிங்கராஜா பணியாற்றிவருகிறார். இவர் பல ஆக்கிரமிப்பு தூதரகங்களில் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். மகாராணியாரின் மேற்படி கௌரவப் பதக்கமான 'ரோயல் விக்டரி' வெகுவிரைவில் பதக்கத்தைப் பெறுவது பெரும் கௌரவம் எனக் கருதப்படுகிறது. [கி]

சாவகச்சேரி நகரசபை

1982-ம் ஆண்டிற்கான

கேள்வி அறிவித்தல்

01-01-82 தொடக்கம் 31-12-82 வரையிலான வரிப்பகுதிக்குக் [கீழ்க்குறிப்பிடுவன] எனற்றிற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 10-11-81-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை எங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை 1

விபரம்	கேள்வி வைப்புப்பணம்	படிவக்கட்டணம்
இரட்டை மாட்டுவண்டி மூலம் இந்நகர சபை எல்லைக்குள் கடத்தப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு	100-00	10-00

அட்டவணை 11

	வியாபாரம்	கடை இல.	சென்ற வருடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகை.	கேள்வி வைப்புப் பணம்	படிவக் கட்டணம்
1.	மாட்டிறைச்சிக்கடை	எஸ். எம். எஸ். 3	21,850-00	500-00	25-00
2.	மாட்டிறைச்சிக்கடை	எஸ். எம். எஸ். 4	18,000-59	500-00	25-00
3.	ஆட்டிறைச்சிக்கடை	எஸ். எம். எஸ். 1	8,100-00	500-00	25-00
4.	ஆட்டிறைச்சிக்கடை	எஸ். எம். எஸ். 2	7,000-00	500-00	25-00

மேற்படி வைப்புப்பணமும், கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதற்கு பேரில் 9-11-1981-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் கேள்விப்படிவக் கட்டணங்கள் திருப்பித்தரப்படமாட்டா. சித்திரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித்தரப்படும். கேள்வி வைப்புப்பணமும், படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல்வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விகள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுக் கடிதமூலம் அனுப்பப்படலாம். எதற்றிற்குக் கேள்வி விடுக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விகள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல்வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ எதற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபைத் தலைவருக்கு உண்டு.

சென்ற வருடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகையிலும் பார்க்கக் குறைவான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இரண்டு மாட்டிறைச்சிக் கடைகளில் சித்திரை கேள்விக்காரர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்தபின்பே இக்கடைகளில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர். ஒரு கடையில் சித்திரை ஒப்பந்தகாரர்தானும் ஒப்பந்தம்செய்யத்தவறும்பட்சத்தில் இரு கடைகளின தங் கேள்விகள் இரத்துச்செய்யப்பட்டு, புதிய கேள்விகள் கோரப்படும். இரண்டு கடைகளுக்குமான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டபின் ஒரு கடையில் ஒப்பந்தகாரனும் இரத்துச்செய்யப்பட நேரிடின் மற்றைய சால கடைகளினதும் ஒப்பந்தங்கள் இரத்துச்செய்யப்பட்டு இரண்டு கடைகளுக்கும் மீண்டும் புதிதாகக் கேள்விகள் கோரப்படும்.

ஆட்டிறைச்சிக்கடைகளுக்கும் மேற்படி நிபந்தனை பொருந்தும்.

முன்னைய வருடங்களில் தனியாராகச் சமயபரம் கருதப்படுபவர்களுக்குக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவல நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. க. மயில்வாகனம்
தலைவர்
நகரசட்சி மன்றம், சாவகச்சேரி.

நகரசட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி, 19-10-1981. 1302

மணிவாக்கு

சைவ சித்தாந்தக் கொள்கையான தமிழர்களின் பேரறிவின் பெரு விளைவாகும். அது மிக விரிவானதும் செல்வாக்குமிக்கதும், மிகப் பெரிய காட்சியை வாய்த்ததுமாகும்.

— டாக்டர் ஜீ. ய போப்

நமது நோக்கு

பண்புடைமைக்கு அழகு

வடபகுதியில் வன்செயல்களினால் உயிர்துறந்த ஆயுதப்படையினரின் குடும்பங்களுக்கு உதவ தமிழ் மக்கள் குழுவொன்று நிதி சேகரித்து வழங்கமுன் வந்துள்ளது பாராட்டுக்குரியது.

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமுள்ள கொடைவள்ளல்கள் தாராளமாக உதவவேண்டுமென்பதே எமது பெருவிருப்பம்.

வடபகுதியில் வாழும் தமிழ் மக்கள் - ஏன் நாட்டின் பல பாகங்களிலும் வதியும் தமிழ் மக்கள் காலத்துக்குக் காலம் பல தீங்குகளுக்குள்ளானது அரசுக்கும் ஏனைய மக்களுக்கும் நன்கு தெரிந்த விடயம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் அரசாங்கத்தின் சட்ட ஆட்சியைப் பெரிதும் பாதிக்கின்றதென்று ஜனாதிபதி பகிரங்கமாகத் தமது கட்சிக்கு கவலையும் கண்டனமும் தெரிவித்திருந்தார். அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்க முயன்றார்.

இதனைத் தொடர்ந்து சீராகும் நிலைமையைக் குழப்புமளவிற்கு மீண்டும் கொலைகளும் கொள்ளைகளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்றன. இவை சட்ட விரோதமான-சமூக விரோதமான செயல்கள். அரசாங்கத்துக்கும் பெரும் சவாலாக அமையும் செயல்கள்; ஆயினும் வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்குத் தினசரி இதுபோன்ற செயல்கள்.

அரசின் கட்டளையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் புரிய வந்த இராணுவத்தினரோ, பொலிஸாரோ தங்கள் கடமைகளை விசுவாசத்துடன் ஆற்றவேண்டிய பொறுப்புடையவர்கள் நாட்டைக் காக்கும் நன்மக்கள். இவர்கள் கடமையிற் தவறினால் தக்க நடவடிக்கை எடுப்பது அரசாங்கமே - பொதுமக்களல்ல!

எனவே நாட்டின் பாதுகாப்புச்சேவையில் ஈடுபட்டிருக்கும் காவற்படையினரைத் தாக்கவோ, கொல்லவோ நாமொருபோதும் இடமளித்தல் கூடாது. கொலையுண்ட இராணுவத்தினர் மற்றைய பிரஜைகள் போல் அப்பாவி மக்கள். தொழில்தேடி ஊதியம் தேடி இராணுவப் பயிற்சி பெற்று சீருடையணிந்த மக்கள், எம்மைப் புறம்பானவரல்லர்.

இவர்களுக்கு இப்பகுதியிலே நேர்ந்ததை இவர்களின் குடும்பங்களுக்குப் பேரிழப்பாகும். இதனை உணர்ந்த இப்பகுதிமக்கள், கொழும்பில் வாழும் பெருவள்ளல்கள் இந்த நட்டத்துக்கு உதவ முன்வந்தது தமிழ் மக்கள் பண்புடைமைக்கு அழகு என்றே குறிப்பிட வேண்டும்.

கொலையுண்டவர்கள் சிங்களமக்கள் என்பதால் இந்த உதவி நிதிக்கு விசேட பெருமை உண்டு; இப்பகுதியில் இந்த ஆக்கிரமம் ஏற்பட்டதால் வடபகுதி மக்கள் இந்தக் கைங்கரியத்தில் முன்னிற்பது அறத்தின் பெருமையை விளக்குகின்றது. . .

பயங்கரவாதமோ திட்டமிட்ட கொள்ளையோ வெற்றிடமாகத் தெவிவுபடாதநிலையில் பத்திரிகைகள் பொறுப்பற்ற செய்திகளைப் பிரசித்தப்படுத்த முயல்வது மீண்டும் ஒரு இனக்குழப்பத்தைத் தூண்டும் செயலாகும்; இது உடனடியாகநிறுத்தப்படவேண்டியது.

விசாரணைகளில் பலவகைப்பட்ட ஆதாரமற்ற விபரங்கள் வெளிவருவது இயற்கை இவையெல்லாம் வெறும் பதரே. இவற்றைத் தூக்கிப்பிடித்து, நூர்ந்துவரும் இனக்குரோதத்தை தூண்ட முயல்பவர்கள் நாட்டின் விரோதிகளென்றே கொள்ள வேண்டும்.

கடந்த பயங்கரவாதச் சம்பவங்களில் கொலையுண்ட பொலிசாரோ இராணுவத்தினரோ, தமிழ் சிங்களம் என்ற இனப்பாகுபாட்டுக்குப்பலியானவர்களல்ல. இந்தக்கொடிய நாடகத்தை நடத்துபவர் அரசுக்கு சவால்விடுகின்றனர். அந்த முயற்சியில் ஆயுதங்களாகி அவஸ்தைப்படுபவர்கள் வடக்கில் வாழும் அப்பாவிமக்களே!

விளக்கக் குறைவாலும் தீயபிரசாரத்தாலும், தென்பகுதியில் வாழும் சிங்கள மக்கள் தமிழ்மக்களிற்நியாயமற்ற வெறுப்படைவது இயல்பு. இந்தவையதவறான தூண்டுதலிற் தணிக்க தமிழ்-சிங்கள தலைவர்கள், பிரமுகர்கள், நல்லெண்ணத்தை உருப்படியான வகையில் பரப்பமுன்வர வேண்டும்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் பிரமாண்டமான பொறுப்பு புலன்விசாரணை நிபுணரையே சாரும், வடபகுதியில் நடைபெறுவதால் தமிழ்ப்பெயர்கள் அடிபடுவதால் தமிழ் இளைஞர்களே இச்சம்பவங்களுக்குப் பொறுப்பு என்றோ, இது திட்டமிட்ட பயங்கரவாதம் என்றோ சந்தேகப்பவர்கள் தான் பொறுப்பென்றோ ஆராயப்படவேண்டும்.

இதுகாறும் வெற்றிகாணாத இந்தப் பெருமுயற்சிக்கு இப்பகுதி மக்கள் உதவ முன்வரவேண்டும், அதற்கு இன்றியமையாதது பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவு. நாம் வாழும் நாடு நம்முடையதென்ற உணர்வு மிகமிக அவசியம்

கடந்த பொலிஸ் வன்செயல்கள், இராணுவமுற்றுகை, அவசரகாலநிலை-இவையெல்லாம் வடபகுதி மக்கள் நாட்டின் பொது வாழ்வில் இடம்பெறாத, ஒளப்படும் பிரதேசமக்கள் என்ற உணர்வை வளர்த்து வருகின்றன.

ஜனாதிபதிக்கு புகார்

[உடுப்பிட்டி]

அண்மையில் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த பத்திரிகை நிருபரான தங்கரத்தினம் என்பவர் எவ்வித காரணமும்

[6-ம் பக்கம் பார்க்க]

சுதந்திர இலங்கையில் இரண்டாவது ராஜ பவனி!

மாட்சிபுரைதங்கிய மகாராணியாரும் எடின்பரோ கோமகனும் தமது 5 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் இவர்கள் சென்ற இடமெல்லாம் இவர்களைப் பார்ப்பதற்காக கூடியிருந்தார்கள். ஆனால் இவர்களில் எத்தனைபேர் மகாராணியையும் கோமகனையும் பார்த்திருப்பார்களே!

21ந் தேதி மாலை கட்டுநாயக்கா விமானநிலையத்தில் மகாராணியும், கோமகனும் வந்திறங்கியது முதல், அவர்களை 25ந் திகதி நண்பகல் வழியனுப்பிவைக்கும்வரை எந்நேரமும் எந்த இடத்திலும் அவர்கள் செல்லுமிடமெல்லாம் ஒரே மக்கள் திரள்! வதைக்கும் வெயிலும், கொட்டும் மழையும் அவர்களுக்கு ஒரு பொருட்டா,என்ன? பாடசாலைப் பிள்ளைகளும், பெண்களும், ஆண்களும், முதியோருமாக பலமணிநேரம் வீதியில் அவர்கள் காத்திருந்தார்கள்! மகாராணியைப் பார்க்கின்ற ஒரு வாய்ப்பு எப்போதும் ஏற்படாவிடக்கூடிய ஒன்றா?

காலிமுகமைதானத்தில் என்றுமே பார்க்காதபடி, நெரிசலில் அகப்பட்டு மூர்ச்சையடைந்த பல பாடசாலைப் பிள்ளைகளை செஞ்சிலுவைச் சங்கத்தினரும், சென் ஜோன் அம்புலன்ஸை சேர்ந்தவர்களும் தாங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அனுராதபுரத்திலிருந்து கண்டி செல்லும் வழியில் குறிப்பாக மாத்தளையிலும், கண்டியிலும் பலத்த மழை கொட்டிக்கொண்டிருந்தது.

∴ ∴

மழையையும் வெயிலையும் மாத்திரமல்ல, பொலிஸாரின் பலத்த பந்தோபஸ்து நடவடிக்கைகளையும் கூடவே இவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது.

இவை பத்திரிகையாளரான நம்மை அவ்வளவு பாதிக்காவிட்டாலும் கடைசியான அந்த பொலிஸ் பந்தோபஸ்து பத்திரிகையாளர்களை - குறிப்பாக படப்பிடிப்பாளர்களை சற்று பாதிக்கவே செய்தது; ஒரு கட்டத்தில் அது சற்று பலமாக, வெடிக்கவும் செய்தது.

மகாராணியின் இந்த விஜயம் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் திட்டமிடப்பட்டது. அவர் சில சமயங்களில் வராமல் விட்டுவிடுவாரா என்ற ஐயமும் அண்மையில் எழுந்திருந்ததாலும்கூட, அவரது வருகை ஊர்ஜிதம் செய்யப்பட்டபின்னர் கடந்த இரு மாதங்களாக பொலிசார் மகாராணியின் விஜயம் தொடர்பான பந்தோபஸ்து நடவடிக்கைகளில் வெகு தீவிரமாக-முழுமையாக ஈடுபட்டிருந்தனர். பத்திரிகையாளருக்கான அடையாள அட்டைகள் புகைப்படத்துடன், துப்பறியும் பொலிஸ்பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. எச். டபிள்யூ. எச். வீரசிங்காவினால் ஒப்பமிடப்பட்டு வழங்கப்படிருந்தன.

மாலி

நான்கு மினிபஸ்கள் எமக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பஸ்ஸிலும் முன் ஆசனத்தில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அமர்த்தப்பட்டிருந்தார். நான்கு பஸ்களுக்கும் முன்னே மோட்டார் சைக்கிளில் இரு பாதுகாப்பு பொலிசார் எந்நேரமும் சென்று கொண்டிருப்பர் இவர்களுடன்; பத்திரிகையாளருடனான தொர்ர்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிபர் திரு. செனரத்தினவும் எம்முடன் வந்து கொண்டிருந்தார். அத்துடன் தகவல் பணிப்பாளர் திரு. ஹென்றி சோமநாதர், பிரித்தானிய தூதரக தகவல் உத்தியோகத்தர் திரு. ரூபிள் பெயிலிஸ் ஆகியோரும் எம்முடன் வந்துகொண்டிருந்தனர். உள்ளூர் பத்திரிகையாளருடன் 25 வெளிநாட்டுப் பத்திரிகையாளரும் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் நியூஸ்வீக், பி. பி. ஸி., லண்டன் டெயிலி ரெலிகிராப், ரூப்ரர், யுமன் ஒன், லண்டன்மிறர், லண்டன் சர்வதேச புகைப்படப்பிடிப்பாளர் நிறுவனம் அசோசியேற்ரட் பிறெஸ் லண்டன் தொலைக்காட்சி நிறுவனம், இல்லஸ்ரேட்டெட் லண்டன் நியூஸ், லண்டன் ஸரம்ஸ், லண்டன் டெய்லி மெயில், ரைம், காடியன் ஆகியவற்றையும் இன்னும் சில நிறுவனங்களையும் சேர்ந்தவர்கள்.

கொழும்பிற் ஹோட்டல் இன்டர் கொண்டினென்டலிலும், கண்டியில் குயீன்ஸ் ஹோட்டலிலும் மகாராணியின் இவ்விஜயம் தொடர்பாக விசேடமாக இரு பத்திரிகை நிலையங்கள் இயங்கிக்கொண்டிருந்தன. விசேட உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி இணைப்புகளும் 'ரெலெக்ஸ்' வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. விசேட உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். அநுராதபுரம், கண்டி ஆகிய இடங்களில் வெளிநாட்டு பத்திரிகையாளருடன் உள்நாட்டு பத்திரிகையாளருக்கும் ஹோட்டல் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. - பொதுவாக பத்திரிகையாளர்களுக்கான ஏற்பாடுகள் வசதிகள் அண்மைக் காலங்களிலே மிகச் சிறப்பாக மகாராணியின் இவ்விஜயத்தின் போது இருந்தன. போக்குவரத்திலும் ஒதுக்கப்பட்ட இடங்களிலும் பத்திரிகையாளருக்கு பொதுவாக ஆசௌகரியங்கள் இருக்கவில்லை எனினும் புகைப்பட, தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்களுக்கு அவர்களுக்கு வாய்ப்பான வீதத்தில் அவர்களால் செயல்பட முடியவில்லை. ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டு அவர்கள் 'அசைய' முடியாதபடி பொலிஸார் அந்த விடயத்தில் மாத்திரம் வெகுகண்டிப்பாக இருந்தனர்.

[5ம் பக்கம் பார்க்க]

காமன்வெல்த் மகாநாட்டில்

வெறும்கோஷங்களுக்கு இடமில்லாமல் போய்விட்டதாம்

மெல்போர்ணில் அண்மை நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களது மகாநாடு நல்ல பலன்களை அளித்துள்ளது என்று வி. தாராசாவ் என்ற விமர்சகர் எழுதுகிறார்.

முன்பு பிரிட்டிஷ் காலனிகளாகவிருந்த 42 நாடுகள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டன.

இம்மகாநாட்டில் வெறும் சம்பிரதாய பூர்வமாக வெறும் "கோஷங்களைக்" கொண்டிருப்பதாக இருக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அதற்கு காமன்வெல்த் அமைப்பில் அங்கம் வகிக்கும் வளர்முக நாடுகள் இடமளிக்கவில்லை என்றும் இந்த விமர்சகர் எழுதுகிறார்.

வெறும் வாதங்களுடன் இந்த மகாநாடு இருக்கக் கூடாது என வலியுறுத்திய இந்நாடுகள் மிக அவசர அவசியமான அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நடைமுறை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளமை வரவேற்கக் கூடியதுதான் என்றும் இந்த நிருபர் எழுதுகிறார்.

அடுத்தது ஆயுதக் கட்டுப்பாடு பேச்சுக்களைத் தொடங்க அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இணங்கியிருப்பதை வரவேற்றுள்ள காமன்வெல்த் மகாநாட்டின் இறுதி அறிக்கை கேந்திர முக்கியத்துவமிக்க ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான பேச்சுக்களும் நடைபெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. அத்துடன் இந்து சமுத்திரம் சமாதான மண்டலமாக வேண்டும்; ஒஸனியாவில் அணுவாயுதப் பரிசோதனைகள் நிறுத்தப்படல் வேண்டும். நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் செயற்படுத்தப்படல் வேண்டும் என்று கூறும் இந்த அறிக்கை ஆக்கிரமிப்பு மீதான தென்னாபிரிக்க இன வாதிகளது படையெடுப்பைக் கண்டித்துள்ளது

பலஸ்தீன மக்களது பராதீனப்படுத்த முடியாத தேசிய உரிமைகளை செயல்படுத்துவதினூடாக மத்திய கிழக்கில் சமாதானத்தை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

மக்கள் கருத்து

மின்சாரக் கோளாறு

எமது பகுதியில் மின்சாரம் பல தடவைகளில் திடீர் திடீர் என்று துண்டிக்கப்படுகிறது. மாதக்கணக்காக எமக்குத் தொல்லையைக் கொடுக்கும் இம் மின்சாரக்கோளாறு இப்பொழுது மழைகாலத்திலும் தொடர்ந்து நீடிக்கின்றது. இது சம்பந்தமாக மாநகர சபை அதிகாரிகளுக்கும் மின்சாரசபை அதிகாரிகளுக்கும் பல தடவைகள் புகார்கள் செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல தடவைகளில், மின்சாரவெளிச்சமும் மறைவாக உள்ளது.

மின்சாரக் கோளாறுகளினால் வாழ் நாளின் வரியிறுப்பாளர்களும், பாதசாரிகளும் மிகுந்த தொல்லைகளுக்கு உள்ளாகின்றார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து மின் பாவனையாளர்களின் கஷ்டத்தைப் போக்கவேண்டும்.

எம். எஸ். துரைராசா
கண்டிக்குளி

இந்திரா பிறந்ததினத்தில்

'பாஸ்கரா-2' விண்கலம் விண்வெளிக்கு அனுப்பப்படும்

புதுடில்லி, அக். 27

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பிறந்த தினமான நவம்பர் 19ம் திகதி இந்தியாவின் 2வது விண்கலமான "பாஸ்கரா" சோவியத் யூனியனிலிருந்து விண்வெளிக்கு அனுப்பப்படுமெனப் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெங்களூர் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் வடிவமைக்கப்பட்ட இவ்விண்கலம் ஏற்கனவே சோவியத் யூனியனுக்கு அனுப்பப்பட்டது. இக்கலத்தை விண்வெளிக்கு அனுப்புவது குறித்த இறுதி ஏற்பாடுகளை கவனிக்கும் பொருட்டு 86 இந்தியப் பிரதிநிதிகளும் சோவியத் சென்றுள்ளனர்.

இக்கலம் எக்ஸ்கதிரையும், வெள்ள அழிவுகளையும் படம் பிடிப்பதுடன் அறுவடை வாய்ப்பையும் முன்கூட்டியே அறிவிக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் 2 நிலையங்களிருந்தும், சோவியத் யூனியனில் ஒரு நிலையத்திலிருந்தும் இக்கலத்தின் செயற்பாடுகள் குறித்துக் கண்காணிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

இந்திரா அனுதாபம்

லண்டன், அக். 27

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் பாரியார் மறைவு குறித்துப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி லண்டனிலிருந்து அனுதாபச் செய்தி ஒன்று அனுப்பியுள்ளார். (இ)

'கல்வியின் மூலமே சமுதாயம் மீட்சிபெறமுடியும்'

[புலோலி]

"கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயம் மக்களுக்கிடையே தொடர்புப் பாலமாக இருந்து ஆற்றிவரும் பணிகள் மகத்தான சாதனைகளாக மிளிர்கின்றன. இத்தேவாலயம் இப்பகுதி கிறிஸ்தவர்களிடையே புதிய யுகத்தை ஏற்படுத்தியுள்ளது."

இவ்வாறு கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தின் 160-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடப்பட்ட விழா மலரில் முதற் பிரதியை பிருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. எஸ். எஸ். சாமுவேலிடம் பெற்று உரையாற்றிய வாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி கே. கிளித்தம்பி குறிப்பிட்டார்.

பருத்தித்துறை-கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபைச் சேர்க் கண்காணிப்பாளர் எண்.கிளிவி முத்தையா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உரையாற்றிய பேராசிரியர் கிளித்தம்பி மேலும் கூறியதாவது:-

இத்தேவாலயத்தின்வரலாறு சரித்திர ஆய்வோடு தொடர்புடையது. இப்பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள பாடசாலைகள் மெதடிஸ்த திருச்சபையின் கல்விப் பணிக்குச்சான்று பகர்கின்றன.

கல்வியின் மூலமே மனித சமுதாயம் மீட்சிபெற முடியும் என்பதைக் கருத்திற்கொண்டு இத்தேவாலயம் இயங்கிவந்தமையினாலே இப்பகுதிகளில் பல கல்விமான்கள் உருவாக வழியேற்பட்டது.

எமது சமுதாயத்தில் புரையோடியுள்ள சாபக்கேடான சாதிப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகாணுவதில் இத்தேவாலயம் முக்கிய பங்கினை வகித்துள்ளதென்பதை மறுக்க முடியாது.

மெதடிஸ்த திருச்சபை வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத்தலைவர், உப்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள். [இ]

திருப்பத்தூர் உபதேர்தல்:

தி.மு.க. - இ. காங்கிரஸ் இணைந்து போட்டியிடுமா?

செயற்குழு கூடுகிறது

சென்னை, அக். 27

திருப்பத்தூர் இடைத் தேர்தலில் தி. மு. க. இந்திரா காங்கிரஸுடன் கூட்டாகப் போட்டியிடக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகச் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து ஆராயும் பொருட்டு தி. மு. க. செயற்குழு அடுத்த மாதம் 4ந் திகதி வரைக்குடியில் கூடுகிறது.

அதேவேளையில் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும், இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. வழப்பையா மூப்பனாரும் சென்னையில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இந்திரா காங்கிரஸ் தமிழ்நாட்டுத் தலைவர் திரு. எம். பி. சப்பிரமணியமும், மத்திய நிதி அமைச்சர் திரு. ஆ. வேங்கட்ராமன், மத்திய விவசாய உதவி அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் ஆகியோர் தி. மு. க.வும், இந்திரா காங்கிரஸும் கூட்டாகப் போட்டியிடுவதை விரும்பவில்லையென்று தெரிகிறது. (இ)

பிரான்சில் வங்கிகள் அரசுடமைக்கு எதிர்ப்பு

பாராளுமன்றம் அங்கீகாரம்

பாரிஸ், அக். 27

பிரான்ஸில் வங்கிகள், தொழிற்சாலைகளை அரசுடமையாக்கும் சட்ட மூலம் ஜனப் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது.

செனட் சபைக்கு அனுப்பப்படும் இச்சட்ட மூலம் அங்கு நிராகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. செனட் சபையில் எதிர்க்கட்சிக்கு அதிகப் பெரும்பான்மை இருப்பதனாலேயே அச்சட்ட மூலம் அங்கு நிராகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

36 வங்கிகள், 10 தொழிற்சாலைகளை அரசுடமையாக்கும் இச்சட்ட மூலத்திற்கு நாட்டில் பொதுவாக எதிர்ப்பு இருந்துவருகிறதென்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

'ஆத்மீகநெறியில் வாழ்ந்து தெய்வீக அருள் பெறவேண்டும்'

[புலோலி]

"பண்டைய வேதங்கள், உபநிடதங்களிலும் விவிவிய நூல், குர்ஆன் ஆகியனவற்றிலும் கூறப்பட்டுள்ளபடி கடவுளை மனதினுள்ளேயே கண்டு சீவன் முத்தி அடைவதற்கு ஞானம் அவசியம். ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வழியை குருமகராஜி மக்களுக்குப் பரப்புகிறார்."

இவ்வாறு புலோலி பிரான்சிஸ் கோட்டடி தெய்வீக ஒளிச் சங்கத்தில் "ஆத்மீக ஞானம்" என்னும் பொருள் பற்றி நிறப்புரையாற்றிய குருமகராஜி பிரதம சீடர் மகாத் மாஜி நிரஞ்ஞானந்தா கூறினார். தொடர்ந்து உரையாற்றிய மகாத்மாஜி நிரஞ்ஞானந்தா தெரிவித்ததாவது:-

"ஞான வாழ்வு வாழ்வதன் மூலம் மக்கள் கிடைத்தற்கரிய பேறான இன்பத்தையடைய முடியும். ஞானமார்க்கமூலம் நாம் இறைவனை அடையமுடியும். கடவுளை ஒளியாகவும், நாதமாகவும், அமிர்தமாகவும் உய்ந்து உணர்ந்து நித்திய அமைதியைப்பெறும் மார்க்கம் ஞானமார்க்கமாகும். ஆத்மீக நெறியில் வாழ்ந்து தெய்வீக அருளைப் பெறவேண்டும்.

"குருமகராஜியின் வழி நின்று நாம் சிறப்பாக இயங்கி வருவோமேயானால் ஆத்மீக நெறியில் வாழ்ந்து தெய்வீக அருளைப்பெற்று உய்வதற்குரிய வழியேற்படும்" என்றார்.

காக்கைவலியால் 8 வயதுச் சிறுவன் கிணற்றுக்குப் பலி

[முரசுமோட்டை]

தண்ணீர் அள்ளுகையில் காக்கைவலி வந்து சிறுவன் கிணற்றில் விழுந்து மரணமானார். இப்பரிதாபச் சம்பவம் முரசுமோட்டையில் நிகழ்ந்துள்ளது.

தி. சுரேஷ் [8 வயது) என்னும் சிறுவனே கிணற்றில் விழுந்து மரணமானார்.

மரண விசாரணையை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். [உ-நி-இ]

சர்வதேச சிறுவர்தின விழா

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான சர்வதேச சிறுவர்தின விழா வடபகுதி சிறுவர்நல உதவி ஆணையாளர் திருமதி. லி. நிலகநாதம் தலைமையில் நாளை பிற்பகல் விக்கிரகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக அரசாங்க அதிபர் திரு. தேவதேவன், நேசயா வாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா, வாழ் தாரபிதா திரு. இ. இராசா விசைநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நவீன மீன்பிடி இயந்திர இயக்குநர் பயிற்சி

(புலோலி)

வாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மீனவ இளைஞர்களுக்கு நவீன மீன்பிடி இயந்திர இயக்குநர் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

வாழ் மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரியில் இம் மீன்பிடி இயந்திர இயக்குநர்களுக்கான பயிற்சிக் அளிக்கப்படவுள்ளதாகவும், இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

தலைமன்னார் ரயில் நிலையத்தில் பிரயாணிகளைப் பாதுகாக்க நடவடிக்கை

[மன்னார்]

தலைமன்னார் துறைமுகத்தையும், ரயில் நிலையத்தையும் சுற்றி 14 அடி உயரத்தில் மதில் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

கப்பல் சேவை நடைபெறும் காலங்களில் தலைமன்னார் துறைமுகத்தில் தங்கிநிற்கும் பிரயாணிகளைத் திருடர்களிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டு இம்மதில் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

'டைனமெட்' வெடிகளுடன் 2 சந்தேகநபர்கள் கைது

[மன்னார்)

ரயில் மார்க்கமாகக் கடத்தி வரப்பட்ட 'டைனமட்' வெடிகளுடனான இரு சந்தேகநபர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

இரகசிய தகவல் ஒன்றை வடுத்து தோட்டவெளி ரயில் நிலையத்தினருகில் பதுங்கியிருந்த பொலிசார், கொழும்பிலிருந்து ரயில் மார்க்கமாகக் கடத்திவரப்பட்ட 'டைனமெட்' வெடிகள் அடங்கிய பெட்டிகளுடன் வந்த இருவரை கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரும் பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ்நிலையத்தில் மரணம்:

மரணவிசாரணை நடத்த மன்னார் நீதவான் பணிப்பு!

(யாழ்ப்பாணம்)

மன்னார் பொலிஸ் நிலையத்தில் மரணமாகி, சுழிபுரம் திருவடி மயானத்தில் புதைக்கப்பட்ட ரி. வரதராசாவின் (38 வயது) மரணம் தொடர்பாக மரண விசாரணையொன்றை நடாத்துவதாக மன்னார் நீதவான் பணித்துள்ளார்.

மன்னார் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லும்போது இவர் அங்கு மரணமாகி, அங்கு மரண விசாரணை நடைபெற்று சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலம் சொந்த ஊரான பண்ணாகம் கொண்டுவரப்பட்டு புதைக்கப்பட்டது.

இவரது மனைவி மன்னார் நீதிமன்றத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, மரண விசாரணையொன்று நடத்துவாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து விசாரணை நடாத்த ஏற்பாடாகியது. பிரேத பரிசோதனை நடாத்த, வைத்திய அதிகாரி வரவழைக்கப்பட்டார். மரண விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (மா)

நிர்வாக மேற்பார்வையாளர்

(புலோலி)

வாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று ஆகிய உப அலுவலகங்களின் நிர்வாக மேற்பார்வையாளராக வடமாகாண வடக்கு கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலுப்பிள்ளையால் வாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தபால் அதிபர் கோடரியால் தாக்கப்பட்டார்

(பச்சிலைப்பள்ளி)

வேலை முடிந்து இரவு நேரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த தபாலதிபர் வழியில் கோடரியால் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் பளைப் பொலிஸ் பகுதியிலுள்ள மருதங்கேணி எனுமிடத்தில் சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

பணி தபால் நிலையத்தில் தபாலதிபராகக் கடமைபுரியும் திரு. இ. மயில்வாகனம் என்பவர் வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கும் போது ஒருவர் கோடரியால் தலையில் வெட்டுப் படுவாயம் விளைவித்துவிட்டு ஓடியதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தவர் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

நூல்கள் வாங்க நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

சங்கானை பொது நூலகத்திற்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு இவ்வருட பண்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் 5000 ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதி மூலம் நூல் நிலையத்திற்கு தேவையான நூல்களையும் சஞ்சிகைகளையும் வாங்குவதற்கு வாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் சங்கானை உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. இரா. தணிகாசலம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார். [உ]

மகாவித்தியாலய நீர் விநியோக திட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க சார்பற்ற மகாவித்தியாலயத்தில் 25 ஆயிரம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட நீர் விநியோகத்திட்டமும் விசாரா விநியோகத்திட்டமும் பூர்த்தியடைந்துள்ளன.

இதற்கான 25 ஆயிரம் ரூபா நிதியை கடந்தவருட பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஒதுக்கீடு செய்திருந்தார். [உ]

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 2-45, 6-30, 9-30
நூல் வேலி

ஹரன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி- விஜயா
ராமு

நீகல் (யாழ்ப்பாணம்)
10-30, 2-00, 6-00, 9-30,
BENHUR
பென்ஹர்

வெல்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 930
எம். ஜி. ஆர்.
மீனவ நண்பன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வொஜி — தேவிகா
பச்சை விளக்கு

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
வொஜி-சரோஜாதேவி
பார்த்தால் பசி தீரும்

8 வது வாரம்
ஸ்ரீதர் தினசரி 1-30, 8 10, 6-15, 9-30
(யாழ்நகர்)
மஞ்சுளா-கவி ... முனிரத்னம்
சங்கராபரணம் (கலர்)

ராணி 9வது வாரம்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பார்வதி, சுமதி
மத்தன் வசி நடித்த
எவர் இல்லாத சித்திரங்கள்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
ஏ. வி. எம். ராஜன் நாகேஷ்
A. V. M. தயாரிப்பு
நானும் ஒரு பெண்
இந்தியாவிலிருந்து திரும்பி வந்த புதிய பிரதி

Rajah Talkies
Daily 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
Jack Lemmon Lee Grant
Christopher Lee
AIRPORT 77
Scope—Color
All new bigger more exciting than "AIRPORT 75" flight 23 has Crashed in the bermuda Triangle passengers still alive trapped underwater.

சாந்தி 6வதுவாரமாகப்பூக்கும்ஜனத்திரள்வாரம்
(யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
கலை... குடு
தமிழ்ப்பேர் வெண்ணிறஆடை நிர்மலா- முத்தராமன்- சந்தரராஜன்
டைரக்ஷன் I.V. சசி — இசை இளையராஜா
தென்னாட்டில் மிகுந்தபரபரப்பூட்டிய கண்ணாமூச்சி ஆட்டம் வாரிசுகள் வழமைபோல் நடைபெறும்.

வின்ஸர் 2-வது ஜனத்திரள் வாரம்
(யாழ்ப்பாணம்)
அமோக வேண்டுகோளுக்கிணங்க காட்சி நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.
தினசரி காலை 10-00, 1-00, மாலை 4-00 மட்டும்
ஸ்டைல் நடிகர் ரஜனிகாந்த், கேரளத்துப் பைங்கிளி சீமா (இருவேடம்), விஜயகுமார், படாபடி-சுருளிராஜன் மனோரமா — மேஜர் மற்றும் பலர் நடித்த
காளி
பல லட்சம் ரூபா செலவில் கருவான மயிர்க்கூச்செறியும் சண்டைக்காட்சிகள், கவர்ச்சி நடனங்கள், இனிய பாடல்கள் நிறைந்த திரைவிருந்து.

நயினையில் கந்தசஷ்டி

[நயினாதீவு]

நயினாதீவு கந்தசுவாமி கோயிலில் வருடாவருடம் நடைபெற்றுவரும் கந்தசஷ்டித் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது.

திருவிழாவின் 6வது நாளான திங்கட்கிழமை சூரன் போரும், மறுதினம் திருக்கல்யாணமும் நடைபெறும்.

'ரயில் பிரயாணிகளிடம் படையினர் அட்டகாசம்'

ஜனாதிபதிக்கு முறையீடு

(யாழ்ப்பாணம்)

எலிஸபெத் மகாராணியார் அனுராதபுரத்துக்கு விஜயம் செய்தபோது வொட்டு - அங்கு விசேஷ கடமைகளென அனுப்பப்பட்டிருந்த படையினர் திரும்பிச் செல்லையில் தமிழ் ரயில் பிரயாணிகள் மீது கட்டுமீறலை புரிந்ததாகவும், இது பற்றி உடன் விசாரணைகள் மேற்கொண்டு குற்றம்புரிந்த படையினரை தண்டிக்கும்படியும் இம்மாதிரி சம்பவங்கள் திரும்பவும் இடம்பெறாவாறு நடவடிக்கை எடுக்கும்படியும் கோரி டாக்டர் மொரக்கோடாவிடம் எம்.ஆர் இடத்தைச் சேர்ந்த சின்னையா பரமலிங்கம் என்பவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்.

கடந்த 23-ம் திகதி காலை கோச்சி துறையிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட இரவு ரயிலில் அனுராதபுரத்தில் வைத்து ரயிலில் ஏறிய சுமார் 150 ஆயுதபாணிகளான தமிழ் பிரயாணிகள் மீது வன்செயல்களிலும் திருடுவதிலும் இழிவுபடுத்துவதிலும் ஈடுபட்டதாக அவர் தெரிவித்துள்ளார். அவர் தனது மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மூன்றாம் வகுப்பில் மூன்று பெட்டிகளிலிருந்த தமிழ்ப் பிரயாணிகள் ஒரு தனிப் பெட்டிக்குள் போகும்படி இந்தப்படை வீரர்கள் உத்தரவிட்டனர். சிலரைத் தள்ளிவிட்டனர்கள். சிலரை மயிரைப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். இவர்கள் அனுராதபுரம் போகும்வரை தாக்கவும்செய்தனர். இவ்வாறு ஒன்றிணைந்த தமிழ்ப் பிரயாணிகள் கும்பல் கும்பலாக எழுவு அறைகளுக்குள் தள்ளப்பட்டு ஈவிரக்கமின்றி வையாலும், பெல்டாலாலும் காலாலும் தாக்கப்பட்டனர். பிரயாணித்து அனுராதபுரத்திலிருந்து பொல்காலை வரைக்கும் இது தொடர்ந்தது. பின்னர் இவர்கள் கழிவறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு சரம் அணிந்த வேறுபாடு தமிழ்ப் பிரயாணிகளிடமிருந்து பணம், வைக்கடிகாரங்கள், மோதிரங்கள் போன்றவற்றை கொள்ளையடித்தனர்.

திரு. பரமலிங்கம் தமது மகஜரில் பிரதிகளை ஜனாதிபதி, ராணுவத் தளபதி, எதிர்க் கட்சித் தலைவர், உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர், திருமதி சிறிமா பண்டாரநாயகா, சரத் முத்தெட்டுவேகம, குணரட்ண பண்டாரநாயகா ஆகியவர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

சுதந்திர இலங்கையில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கண்டி கடுகஸ்தோட்டை பாலத்துக்கருகே கண்டி மாநகரசபை மகாராணிக்கு வரவேற்பொன்று அளித்தது. மகாராணி மாலை 5-10 க்கு அந்த வந்து சேர்வதாக ஏற்பாடு ஆனால். அனுராதபுரத்திலிருந்த பெருந்திரளான மக்கள் கண்டி வரை திரண்டிருந்ததால், மகாராணியின் வருகையில் ஒரு மணி நேரத்துக்கு மேல் தாமதமேற்பட்டது. 6 மணியளவில் நாம் அவ்விடத்தைச் சென்றடைந்தோம்.

பி. பி. ஸி. செய்தி ஆசிரியரின் ஆத்திரம்

மகாராணி வருகையின் தாமதத்தை நாம் அறிந்ததால் பி. பி. ஸி. செய்தி ஆசிரியர் மாக் ரலியும் மற்றும் சிலரும் தமது செய்தி தாமதிப்பது விடாதிருப்பதற்காகவே ஒலிஸ்ஹோட்டலுக்கு திரும்பத்துக்கு சென்றதாக ஒரு பஸ்லில் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அவர்களை வேறு ஒரு பாதையால் திருப்பிவிட்டதில், 20 மைல்கள் தூரம் சென்று இரவு 7 மணிக்கு திரும்பி வந்தார்கள் அவர்கள்.

மறுநாள் விக்டோரியா அணைக்கட்டுப் பகுதியிலும் பத்திரிகையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் நாம் நின்றுகொண்டிருந்தோம். தொலைக்காட்சி படப்பிடிப்பாளர் ஒருவர் விடப்பட்டிருந்த கயிற்றுக்கு வெளிப்புறமாக நின்று கொண்டிருந்தார்.

உடனே அங்கு வந்த பொலிஸ் அதிபர் ஒருவர் அவரை கயிற்றுக்கு உள்ளே வரும்படி அழைத்தார். அச்சமயம் எங்களுடனே நின்றுகொண்டிருந்த பி. பி. ஸி. செய்தி ஆசிரியர், "இலங்கையிலாவது பொலிஸார் பத்திரிகையாளர் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு விடுவதில்லை" என்று, அந்தப் பொலிஸ் அதிபருக்கு கேட்கும்படியாகக் கூறினார்.

"பத்திரிகைக்காரர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலாவது அவர்கள் நிற்கவேண்டும். இதெல்லாம் பாதுகாப்பு ஏற்பாடுகள்; பத்திரிகைக்காரரை சமாதானப்படுத்துவது கடினம்" என்றார் அந்த பொலிஸ் அதிபர்.

"நீங்கள்தானே எம்மை நேற்று இரவு தவறாக வழி காட்டி, 20 மைல் மேலாக செய்த பொலிஸ் அதிபர்" என்றார் மாக்.

"எப்போ, எப்போ.....?" என்றார் பொலிஸ் அதிபர்.

"கட்டுகஸ்தோட்டையில்" என்ற மாக், "பாவாயில்லை; அச்செலவை மூலம் பி. பி. ஸி. ஒலிபரப்பில் நீங்கள் இடம் பிடித்துக்கொள்ளலாம்" என்றார்!

★ ★ ★

பேராதனை பூங்கா 'ஒக்கிட்' மண்டபம் வரையில் "முடி" வடிவில் பந்தல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன் இருபுறமும் பத்திரிகை வாசகர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது அந்தப் பகுதி மட்டும். இந்தப் பகுதி வெறுமனே நின்றுகொண்டிருந்தோம்.

இந்தப்பகுதி வந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தள்ளி நிற்கும்படி கூறினார்.

"இது பத்திரிகைக்காரர்களுக்கான இடமே தான்" என்றார் அசோஷியேடெட் பிறெஸ் புகைப்படப் பிடிப்பாளர் ஜெவ்றி ரொபிஸ்.

"நாம் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது" என்றார் பொலிஸ் உத்தியோகத்தர்.

"பாதுகாப்பு மக்களுக்குத் தான் வேண்டியது" என்றார் ரொபிஸ்.

அதிலிருந்து ஸ்ரேஷ்ட அமைச்சரிடம் அதை அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் சென்று சொன்னார். உடனே எழுந்த அமைச்சர், "வாராவது அப்படிக் கூறினீர்களா?" என்றார்.

"ஆம்" என்றார் ரொபிஸ்.

"உடனடியாக நீர் இவ்விடத்தைவிட்டு வெளியேறலாம்" என்றார் அமைச்சர்.

அவர் வெளியேறினார்.

"எங்கேயடி ஐ ஜி? அவரை உடனே வெளியே அனுப்புங்கள்" என்று மீண்டும் கூறினார் அமைச்சர்.

"நாம் எல்லோருமே போகிறோம்" என்று கூறிவிட்டு "வாருங்கள் எல்லோரும்" என்று அனைவருமே புறப்பட்டார்கள். அப்போது வரிசையில் விக்டோரியா அணைக்கட்டில் சந்தித்த பொலிஸ் அதிபர் தான் விரைந்து வந்து சமாதானப்படுத்தினார். பத்திரிகையாளருக்குப்பொறுப்பான தலைமை பணிப்பாளர் திரு. சோமதாஸ், பிரிட்டிஷ் தகவல் உத்தியோகத்தர் திரு. ரொபிஸ்ஸும் அவ்விடம் விரைந்து வந்து அவர்களும் சமாதானப்படுத்தினர்.

[-தொடரும்]

அபிவிருத்திசபை மாதாந்தக் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் சோமசுந்தரம் மைதானம் நேற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் மாதத்துக்கான 2வது பொதுக்கூட்டம் இதனால் நடாத்தமுடியவில்லை.

ஒரு மாதத்தில் இரு கூட்டங்கள் நடாத்தப்படுவது விதிமுறை.

இம்மாதம் 14ந் திகதி அபிவிருத்திச்சபையின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அடுத்த கூட்டம் அதாவது மாதாந்த 2வது கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெறவேண்டியது. ஆனால் சோமசுந்தரம் மைதானம் இக்கூட்டம் நடைபெறமுடியாமற் போய்விட்டது. [மா]

புடைவைக்கடையில் ஓடு பிரித்து பணம் திருட்டு!

[புலோலி]

நள்ளிரவு வேளையில் கடை பொருளில் ஓட்டைப் பிரித்துக்கொண்டு புகுந்த திருட்டுக் கோஷ்டியினர் அங்கிருந்து சுமார் 18,000 ரூபா ரொக்கப் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

பருத்தித்துறைப் பஷாரியிலுள்ள புடவைக் கடையிலேயே இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது. திருடர்கள் அங்கிருந்த பணத்தை மட்டுமே திருடிச் சென்றுள்ளார்களென்றும் வேறு பொருட்களில் அவர்கள் கைவைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணை செய்துவருகிறது.

திருடர்கள் பணத்தைத் திருடிக்கொண்டு ஓடுகையில் வீதியில் பணம் கொட்டப்பட்டதாகவும், மறுநாட் காலை மக்கள் அப்பணத்தினைப் பொறுக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

மீனவர் கூட்டுறவுச் சங்கம்

[புலோலி]

பொலிகண்டிப் பகுதிக் கூட்டுறவு மீனவர்களின் நலனை கருதிப் பருத்தித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கம் பொலிகண்டியில் மீன் பிடி கூபரான விற்பனைநிலையமொன்றை நிறுவியுள்ளது!

"கல்வி வெள்ளை அறிக்கை

தாய்மொழியைப் புறக்கணிக்கிறது!

கருத்தரங்கில் விரிவுரையாளர் கருத்து

யாழ்ப்பாணம்

"கல்வி வெள்ளை அறிக்கையில் இந்த அரசாங்கம் தாய்மொழியைப்புறக்கணித்து விட்டது. பெற்றோர் விரும்பும் மொழியென்றும் கூறாமல் முதன்பாஷை என்று கூறுகிறது. இதில் அர்த்தமில்லை. தாய்மொழியிலேயே கல்வி போதிக்க வேண்டும்". என்று யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. வி. ஆறுமுகம் இலங்கை ஆசிரியர்சங்க யாழ். மாவட்டக்கிளை நடாத்திய கல்வி வெள்ளையறிக்கை சம்பந்தமான கருத்தரங்கில் கலந்து கொண்டு. பொதுக்கல்விபற்றிப் பேசுகையில் வலியுறுத்தினார்.

இ. ஆ. சங்க வடமாகாணக் கிளையின் தலைவர் திரு. தியாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. ஆறுமுகம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

திரு. இரியகொல்லை கல்லூரி மத்திரியாவிருக்கையில் பெற்றோர் விரும்பும் மொழியிலேயே கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்: அரசாங்கம் இஷ்டப்படி கல்விக் கொள்கையை மாற்றி அமைப்பதாலே முந்திய கல்விக் கொள்கையில் இருந்த குறைபாடுகளை அறிய முடியாமலிருக்கின்றது. கல்விக்கொள்கையும் தொடர்பிலாமல் போகிறது. இதனால் கல்வித்துறையில் குழப்பம் தான் ஏற்படுகிறது.

ஆங்கில போதனை

அவர் மேலும் பேசுகையில், "ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்க வேணடும், ஆனால் அதை ஒரு தொடர்பு மொழி என்றுகூறி தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவோம் என்று சொல்வதில் அர்த்தமில்லை" என்றும் குறிப்பிட்டார்.

"தேசிய ஐக்கியத்தை வளர்க்க சிறந்த முறை சிங்களப்பிள்ளைகள் தமிழும் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களமும் கற்க வேண்டும் என்றும் திரு. ஆறுமுகம் ஆலோசனை கூறினார்.

திரு. சுனில பண்டிதான் "பல்கலைக்கழக மாணவர்கள் ஆணைக்குழு திறந்த பல்கலைக் கழகம்" என்பது பற்றி உரையாற்றுகையில் கல்வி வெள்ளை அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைக்கேற்ப ஒரு குறிப்பிட்ட கல்வி முறையை ஏற்படுத்துவதாகும். கல்விக்கு இந்நாட்டில் ஏற்படும் செலவு காலத்துக்குக் காலம் அதிகரித்து வருகிறது. இது அரசாங்கத்துக்குப் பாரமாக இருக்கிறது. இப்படியாக கல்விக்கு செலவு செய்தபோதிலும் சமத்துவமின்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பிள்ளைகளுக்கு தேவையான கல்வியை கொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

"சர்வதேச நிதிநிறுவனம்- உலகவங்கியுடைய கட்டளைக்கமைய அரசாங்கம் கல்விச் செலவை குறைக்க முற்படுகிறது.

பரீட்சைகளைப் பொறுத்து பிள்ளைகளின் தகைமையை அறிவதற்கு எழுத்துமூலப் பரீட்சை மட்டுமல்ல, வேறு பல முறைகளை கையாள உத்தேசிக்கிறார்கள். இது பற்றி வெள்ளை அறிக்கையில் திட்டவட்டமாகக் கூறவில்லை.

சான்றிதழ்கள் தேசிய மாவட்ட பாடசாலைக் குழுக்கள் மட்டத்தில் வழங்கப்போகிறார்கள். இதனால் பிள்ளைகள் தொழில் தேடிச்செல்லும் பொழுது வெவ்வேறு மதிப்பளிக்கப்படும் இதன்மூலம் சிக்கல் ஏற்படும்.

"12ம், 13ம் வகுப்பில் உயர் படிப்புக்கு ஒரு மாணவன் சேர்வதற்கு அவ்வகுப்பில் ஜி. கி. ந பரீட்சையில் அவனுடைய சாதனை மட்டும் கருத்தில் கொள்வதில்லை வேறுபல புதிய தெரிவு முறைகளும் அனுஷ்டிக்கப்படும். இது மீண்டும் சிக்கலை ஏற்படுத்தி ஊழலை ஏற்படுத்தி விடும்" என்றார்.

கல்வியும் வழிகாட்டலும்

சாவகச்சேரி மகாவித்தியாலயக் கல்லூரி அதிபர் திருமதி குணேஸ்வரி பரராசசிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது;

"கல்வியும் வழிகாட்டலும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் சரியான முறையில் வழிகாட்டுகின்றோமா? பிள்ளைகளுக்கு வீட்டில் பிரச்சனை பாடசாலையில்பிரச்சனை. பொருளாதாரக் கஷ்டத்தால் தான் இப்பிரச்னைகள் எழுகின்றன.

வெளிநாடுகளில் ஆலோசனைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இங்கு பிள்ளைகள் சரியானமுறையில் வழிகாட்டப்படுவதில்லை.

"ஆசிரியர்கள் வருமானம் குறைவு. மிகவும் கஷ்டமான நிலையிலேயே தொழிற்படுகிறார்கள்.

பிள்ளைகளுக்கு தொழில் ஆர்வமூட்ட ஆரம்பத்திலிருந்தே வழிகாட்டவேண்டும் எல்லா ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக இருக்கமுடியாது".

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எச். எஸ். பரீஸ்தா 'கல்வி வெள்ளை அறிக்கையும் தொழிற்சங்கங்களின் பங்கும், என்பது பற்றி உரையாற்றுகையில் கூறியதாவது:

நன்மைபெறுபவர்

'இக்கல்வித் திட்டத்தில நன்மைபெறுபவர் முதலாளிவர்க்கத்தினர்தான் திரு. கன்னங்கரா அவர்களால கொண்டு வரப்பட்ட இலவசக் கல்வி முறைக்கு. இந்த அரசாங்கத்தின் கல்விமந்திரி முற்றுப் புள்ளி வைக்கப்பார்க்கிறார்.

இன்று நூறுக்கு 50 வீதமான பிள்ளைகள் வறுமை காரணமாக பாடசாலைக்கு வராமல் இருக்கிறார்கள்.

இந்திய வம்சாவழியினரின் பிள்ளைகள் 10 - 12 வயதிலே தொழிலுக்குச் செல்கிறார்கள். சர்வதேச சட்டத்தில் இது தடை செய்யப்பட வேண்டும்.

இன்று நூற்றுக்கு 78 வீதம் தான் எழுத,வாசிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள். 100 க்கு 2 வீதம் தான் பல்கலைக்கழகத்துக்கு செல்கிறார்கள்.

சிறுவர்களின் கல்வியிலும் மிகவும் பாதிப்படைந்து வருகிறது. கல்வி வெள்ளைஅறிக்கை மேற்கு நாடுகளின் திட்டப்படி வகுக்கப்பட்டுள்ளது.

சுவீடன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் தொழிலாளர்களின் பிள்ளைகள் உயர்கல்வி கற்க முடியாது. தனிப்பட்ட முறையில் உயர் குடும்பங்கள் உயர் கல்வி கற்க கூடிய முறையில் அங்கு கல்வி முறை அமைக்கப்பட்டுள்ளது.

இங்கும் பணக்காரர் - வறியவர்கள் வேறுபாடு பாடசாலைகளில் கூடிக்கொண்டு வருகிறது. இதற்கு நாளந்தா, சென் தோமஸ் போன்றவை உதாரணமாகும். பல கோடிரூபா கல்விக்குச் செலவிடப்படுகிறது. இப்பணத்தைக் குறைப்பதுதான் வெள்ளை அறிக்கையின் நோக்கம்.

இவ்வறிக்கையில் ஆசிரியர்கள் தெரிவுமுறை சம்பள குறைகள் பற்றி கூறப்படவில்லை. அதிகாரிகளின் ஆட்சியின் கீழ் ஆசிரியராக இயங்க வேண்டியிருக்கிறது.

"கல்விக்கொள்கையில் அரசியல் புகுந்துள்ளது. ஆசிரிய நியமனம், இடமாற்றம் பென்சன் போன்றவற்றுக்கு அரசியல்வாதிகளிடம் போகவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின்புதான் அரசியல்வாதிகள், அதிகாரிகளின் செல்வாக்கு அதிகரித்தது.

அரசியல்

தென்னிலங்கையில் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக ஆசிரியர்கள்- அதிபர்கள் இயங்குகிறார்கள் மந்திரி சபையின் தீர்மானப்படியே ஆசிரியர்களுக்கு பதவிஉயர்வு வழங்கப்படுகிறது [என்றார்

பொருளாதாரக் கஷ்டத்தால் அதிகமான ஆசிரியர்கள் இன்று வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள். இதனால் வெளிநாட்டிலிருந்து கல்விச்சேவைக்கு இறக்குமதிசெய்ய அரசாங்கம் யோசிக்கிறது.

25 வருடங்கள் சேவை செய்த ஆசிரியர்கள், ஆசிரியர்களாகவே ஓய்வு பெறுகிறார்கள் பதவி உயர்வு குறைவு; இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நினைக்கிறார்கள்.

நிர்வாக சேவைகளுக்கு ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவதில்லை.

ஓய்வுபெற்ற உரும்பராய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. வைத்திலிங்கம் கற்பித்தற் சேவைபற்றி வரையாற்றுகையில் "ஆசிரியர்கள் மாவட்ட ரீதியிலாமல் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட வேண்டும். இதனால் ஆசிரியர்கள் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் தொடர்பு ஏற்படுத்த முடியும்; அரசியல் தலையீடும் ஏற்படாது; பாடசாலையும் சிறந்த முறையில் இயங்கும் என்றார்.

மற்றும் இளைப்பாறிய யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம். பரியோவான் கல்லூரி அதிபர் திரு. செ. இ. ஆனந்தராஜன், பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கு. நேசையா ஆகியோரும் உரையாற்றினர். (மா)

ராணுவத்தை அரசு வாபஸ்பெறவேண்டும்!

நவசமசமாஜக்கட்சி பிரமுகர் கருத்து

[யாழ்ப்பாணம்]

ஆயுதப்படையினரின் அட்டூழியங்களின் காரணமாக வடக்கிலுள்ள தமிழ்மக்கள் பீதியுற்ற நிலையில் வாழ்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக ராணுவத்தை வாபஸ்பெற்று தமிழர் விடுதலைக்கூட்டணி முன்வைத்துள்ள 5அம்சக்கோரிக்கையை வழங்க முன்வரவேண்டும் என்று திரு வாசுதேவ நாணயக்கார தலைமையான நவ சமசமாஜக் கட்சியின் மத்திய அரசியல்குழு உறுப்பினர் திரு. லியினஸ்ஜயத்திலக்க கூறினார்.

மேற்படி கட்சியின் சார்பிலும், அத்துடன் இணைப்புக் கொண்ட தொழிற் சங்கங்கள் சார்பிலும் திரு. ஜயத்திலக்க வடபகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி அறிவதற்காகவும் ஆலோசனைகள் நடாத்தவும் வந்திருந்தார்.

வடபகுதியில் எழுந்துள்ள நிலைமை காரணமாக நாங்கு இயக்கங்களைக் கொண்ட தொழிலாளர் ஐக்கியத்துக்கான கமிட்டி, சகல கட்சிகளையும் மக்கள் இயக்கங்களையும் ஒன்று திரண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் 5அம்சக் கோரிக்கையை நிறைவேற்றும்படி அரசாங்கத்தை வற்புறுத்தும்படி கோருவதென முடிவுசெய்திருப்பதாகவும் திரு. ஜெயதிலக்க தெரிவித்தார்.

ஆயுதப்படையினரின் அடாதீழிசச் செயல்களை தமது இயக்கம் கண்டிப்பதாகவும் இச்செயல்களுக்கு அரசே பொறுப்பேற்றும் அவர் தெரிவித்தார்.

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ கதிரேசன் கோயிலில் கந்தர் சஷ்டி விழா இன்று புதன்கிழமை தொடக்கம் நவம்பர் மாதம் 3ந் திகதி செவ்வாய்க்கிழமை வரை உபயகாரர்களின் அனுசரணையுடன் நடைபெறும். தினமும் காலை 8.00 மணிக்கு ஸ்நபனாபிஷேகம், திருச்செந்தூரிப் புராண படனம், மாலை சந்தனக்காப்புடன் ஆறுமுக அர்ச்சனை, சுவாமி உள்வீதி உலா ஆகியன நடைபெறும்.

ஜனாதிபதிக்கு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்றி தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு இலங்கைப் பத்திரிகையாளர் இயக்கத்தலைவர் திரு ஏ. என். எஸ். திருச்செல்வம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இத்துரதிர்ஷ்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டு குறித்த பத்திரிகையாளருக்கு நிவாரணம் வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என்று அவர் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட தமிழர்களுடையது எனக்கூறப்பட்டது. எனினும் அச்சடலங்கள் இலங்கைத் தமிழர்களுடையது என்பதற்கு எதுவித அதாரமும் கிடையாது என்றும் திரு. நரசிம்மராவ் கூறினார். (இ)

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
உல்லாச பஸ் சேவை
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
யாழ்ப்பாணத்திலிருந்து
புறப்படுதல்:
செவ்வாய், வியாழன்,
ஞாயிற்றுக்கிழமைகளில்
கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பினான்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310
(2) யாழ். மெட்டல்சேல்ஸ்சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 7596.
கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்
ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.
ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.
J. M. S. மிராண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, மம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866
கட்டணம் ரூபா 65-00

மரண அறிவித்தல்

ஜெகதீசன் விக்கினேசன்

இவர் கம்பளை நூபாஅதிபர் ஜெகதீசன் அராலி வடக்கு திருமதி ஜெகதீசன் ஆகியோரின் இளைய மகனும், ஜெயந்தினி [மட்பாண்டக் கூட்டுத்தாபனம்], சாந்தினி [பல்லவத்தியபீடம் பேராதனை], சுதர்சன் [ஸ்கன்ஸ்கா, கொத்தலை நீர்த்தேக்கத் திட்டம்], ரமணி [உயர்தர மகளிர் பாடசாலை, கண்டி], ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரிகைக்காக 126, கோவில் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து இன்று [28-10-81] மாலை 3-30 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும். 1316

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 வீ அக்டோபர் 28-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது, Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889. 8126,